

சுண்டிக்குழியை வசிப்பிடமாகக் கொண்ட

அமரர்களான

# சிவக்கொழுந்து இராஜேஸ்வரன்
# செல்வபாக்கியம் இராஜேஸ்வரன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15.11.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



சுண்டிக்குழியை வசிப்பிடமாகவும்

கொண்ட

அமரர்களான

# சிவக்கொழுந்து இராஜேஸ்வரன்

# செல்வபாக்கியம் இராஜேஸ்வரன்

அவர்களின் நினைவு குறித்த

# நினைவு மலர்

**15.11.2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பொறுப்பு மிக்க தந்தையாய்
அன்பு நிறைந்த தாயாய்
பொறுமையின் சிகரமாய்
அறிவுசார் ஆசான்களாகவும்
பண்பு நிறைந்த மனிதராய்
ஊருக்கு உதவும் உத்தமராய்
சாந்தமாக அமைதியுடன் வாழ்ந்து
எம்மையெல்லாம் நல்ல நிலைக்கு
உயர்த்திய எம் அன்புத் தெய்வங்கள்
அமரர்களான சிவக்கொழுந்து இராஜேஸ்வரன்
செல்வபாக்கியம் இராஜேஸ்வரன்
அவர்களின் பாதார விந்தங்களில்


" வானுயர்ந்த வரத்தால் வந்துதித்த இருவரும்
தானுயர்ந்த தவத்தால் தாரமதில் ஒருவராகி
கோனுயர்ந்த வாழ்வு பெற்று குடியுயர்ந்து நின்று
மீனுயர்ந்த வானமதில் சோடியதாய்க் கலந்தனரே"

**இங்ஙனம்**
**மகள்மார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்கள்
# சிவக்கொழுந்து இராஜேஸ்வரன்
# செல்வபாக்கியம் இராஜேஸ்வரன்
# தம்பதிகள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி
காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாள் பணிந்(து) ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமா புரம் மேவிய பெம்மான் இவன் அன்றே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளுவதினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி உமை மணவாளனுக்(கு) ஆம்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமை இலாக் கலைஞானம் உணர்வறிய மெய்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறைஅறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளையார் அகவல்

சீதக் களப்பச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தள கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவாடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவட்டாவுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாபி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
யமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக் கரத்தி னீரெட்டு நிலையு
முடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முகதூலமுஞ் சதுர்முக சூர்க்மமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக்கருளி
யென்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக்களைந்து
வாக்கும் மனமு மில்லா மனோலயந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியி
லெல்லை யில்லா வானந் தம்மளித்
தல்லல் களைந்தே யருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தித்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
யணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தித்
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
யஞ்சக் கரத்தி னரும்பொருடென்னை
நெஞ்சக் கருத்தி னிலேயேறி வித்துகத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

விநாயக அகவல் முற்றிற்று

# சங்கடகர சதுர்த்தி

மாதம் தோறும் வரும் தேய்பிறைச் சதுர்த்தி தினமே சங்கடகர சதுர்தியாகும் இவ் விரதத்தைக் கடைப்பிடிக்க இருப்பவர்கள் மாசி மாதத்தில் செவ்வாய்க் கிழமை யில் வரும் சங்கடகர சதுர்த்தியிலே ஆரம்பிக்க வேண்டும். மாசி மாதத்தில் இவ்வாறு செவ்வாய்க்கிழமையில் அமையாவிட்டால் மற்றைய மாதங்களில் செவ்வாய்க் கிழமையில் வரும் தினத்தில் ஆரம் பிக்கலாம். அன்றைய தினம் பகல் முழுவதும் உபவாசமிருந்து சதுர்த்தி பூசை முடித்து இரவு உணவருந்தி விரதம் முடிக்க வேண்டும் அன்றையதினம் விநாயகப் பெருமானிற்கு நெய் தீபம் ஏற்றி வன்னிப் பத்திரத்தால் அர்ச்சனை செய்து வழிபடுவதால் அடியார்களது பலவித சங்கடங்கள் எல்லாம் நிவர்த்தி யாகும். என சமய நூல்கள் கூறுகின்றன. இப்படி வழிபட்டு அடியவர் கள் பல துன்பங்கள் நீங்கியதாக வரலாறு கூறுகின்றது இந்தியாவில் இவ் விரதத்தி ற்கு முக்கிய இடம் கொடுத்து சிறப்பாகச் செய்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பைரவக் கடவுள் துதி

வெஞ்சிரப் பிரியழகன் மீது போர்த்திரு
மஞ்சளப் புகையென வால மாமௌச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேந்துவாம்

தாளம் பொலி மலரோ னாதி வானவர் தாழ்ந்து போற்ற
உள்ளம் பொலி காசி மேவு மயிற்கள் செய்பாவ மெல்லாங்
களம் பொலியது தண்டங் கண்டற வொழித்து முத்தி
வளம் பொலி வைகை செய்கால வயிரவற் கன்பு செய்வாம்

தேவராஜ ஸேவ்ய மாந பாவநாங்க்ரி பங்ஜம்
வ்யாள யஜ்ஞ ஸ"த்ரமித்து சேகரம் க்ந பாகரம்!
நாரதாதி யோகிப்ருந்த வந்திதம் திகம்பரம
காசிகாபுரதிநாத கால பைரவம் பஜே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு.சிவக்கொழுந்து இராஜேஸ்வரன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

உயர் சைவமேளார் குல தோன்றலும். நாவலி வடக்கு தமிழ் பெருங்குடி மரபில் தோன்றலும் வணக்கத்துக்குரிய மறைஞான வள்ளல் வன்னியசேகர் முதலியார் வழித்தோன்றலும் அமரர் திரு சின்னத்தம்பி இராமநாதன் வைரமுத்து சிவக்கொழுந்து மற்றும் அமரர் திருமதி பென்னம்மா தம்பதிகளின் பாசமுள்ள மகனாக அமரர் திரு சி.இராஜேஸ்வரன் அவர்கள் 30.4.1927ல் அவமதித்தார்.அமரர் இராஜேஸ்வரன் 7வது வயது முதல் இறக்கும் வரை கிட்டத்தட்ட 83 வருடாங்களுக்கு மேல் தங்கள் பேரன் அமரர் இராமநாதன் வைரமுத்து அவர்கள் கட்டிக்காத்த நாவலி வடக்கு தேற்றமரத்தடி ஸ்ரீஞானவைரவர் ஆலயத்தை பராமரித்து வந்தார். இவர் தனது 18வது வயதில் இலங்கை மத்திய வங்கியில் லிகிதராக பணியாற்ற ஆரம்பித்தார். ஓரிரு வருடங்களின் பின் மத்திய வங்கியிலிருந்து விலகி இலங்கை வங்கியில் தனது பணியை ஆரம்பித்தார். கிட்டத்தட்ட பல ஆண்டுகளாக பல்வேறு பல்வேறு இலங்கை வங்கிக் கிளைகளில் பணியாற்றி தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். அமரர் இராஜேஸ்வரன் அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் இலங்கை வங்கியின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டார் என்ற கூடக் குறிப்பிடலாம். இத்துடன் திரு.ம. சிவகணநாதன் அவர்களால் எழுதப்பட்ட அமரர் இராஜேஸ்வரன் ஆற்றிய அருஞ்செயல்கள் பற்றிய தொகுப்பு ஆங்கிலத்தில் இணைக்கப்பட்டுள்ளது. இவ்வாக்கம் இலங்கை வங்கி ஓய்வூதிய சங்கம் யாழ்ப்பாணக்கிளையின் “வாழ்நாள் வங்கியாளர்” மலர் -1, இதழ்-1, பங்குனி 2012 ல் பிரசுரிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ஞான வைரவர் ஆலய சித்திரக் கஞ்சி மடம்
அடிக்கல் நாட்டும் வைபவத்தின் போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ACHIEVEMEENTS OF
## MR. S. RAJESWARAN ONE OF THE SENIOR BANKERS

Mr.Rajewaran is a very senior member of our Association. During his tenure with the Bank of Ceylon and after retirement, he has in his own quiet way, campaigned and achieved favourable results in bringing about changes and benefits to the Bank of Ceylon and his comrades.

We list below a few of his achievements.

1.He was instigating, since 1989, to recruit children of Bank employees to the Bank's service. We see this as a reality today.

2.His request for the issue of commemorative stamps during the B.O.C. 's 50th year celebrations was heeded by the Govt. and stamps to the value of Rs.5 & Cts.=/75 were issued.

3. During the displacement in 1995 when Bank were functioning in temporary offices, he made representations to the Management regarding matters such as payment of pensions and helped regularise matters.

4.At a time when 21 years of age was considered the minimum age to open savigs/current accounts, he took the initiative to appeal to management to reduce the age to 18 and thus helped expand our deposit base and improve business.

A letter from D .G .M (Technology & Banking Development ) in appreciation is quoted below.

D.G.M (Technology & Banking
Development )'s Office,
22nd Floot -Head Office,
75 Janadhipathi Mawatha,
Colombo-1.
24th Oct 1989.

Mr. S. Rajewaran
"Selvasthanam"
46, Vidanayar Street,
Chundikuli,
Jaffna.

Dear Mr. Rajeswaran,
Thank you for your letter of 16th instant, regarding the opening of current of current and savigs for those over 18 years of age.

I am happy that the procedure initiated by you in 1983 has ultimately come to be realised in June this year. Experienced officers like you and the contributions have always been appreciated by the management.

I thank you for your personal best wishes and wish you a happy and healthy life.

Your sincerely,
K. Sivagananathan

(Copied from EMERITUS BANKERS
Vol-01 No-01 March 2012 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி செல்வபாக்கியம் இராஜேஸ்வரன்
# அவர்களின்
# வாழ்க்கை வரலாறு


உலகு திசை யாவும் உற்று நோக்கும் உன்னத திருநாடாம் ஈழமா மண்ணின் தலையென விளங்கும் யாழ்ப்பாணக்குடாநாடு. இத்தகைய குடாநாட்டின் அச்சாணி போன்று விளக்கும் யாழ்நகர் எனும் திருவூர். வாழையடி வாழையாகச் சைவவேளாண் குடிகள் நிரம்பிய சுண்டுக்குளியூரை சேர்ந்த திரு.முத்துக்குமாரு செல்லத்துரைக்கும், யாழ் நகரை சேர்ந்த திருமதி சிவபாக்கியம் தம்பதிகளின் அருந்தவப் பயனாய் வந்துதித்த குடும்பத்தின் மூத்தமகளாக அமரர் திருமதி செல்வபாக்கியம் இராஜேஸ்வரன். இவர் 18.03.1934 இல் உதித்தார். இவருடன் கூடப்பி றந்த சகோதரர்களாக செல்வமணி, செல்வநாயகி, காலஞ் சென்றவர்களான சிவஜோதி, செல்வராணி, நடராஜா மற்றும் செல்வராசா ஆகிறோர் உடன்பிறப்புக்களாய் கிடைக்கப்பெற்றனர். அமரர் செல்வபாக்கியம் தனது ஆரம்பக்கல்வியை வேம்படி மகளிர் கல்லூரியிலும், பின்னர் உயர்கல்வியை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். கல்வி பெறுபேறுகள் கனிவாக அமைய வேண்டும் என நினைத்து உயர்கல்வியை தொடர்ந்து, இராமநாதன் கல்லூரியின் அலுவலக லிகிதராகவும், பின்னர் பகுதிநேர ஆசிரியராகவும் பதவி பெற்று நிமிர்ந்தார். இதற்கிடையில் வாழ்வில் வசந்த கால நிறைவெல்லாம் போறறப்படும் இனிய நன்நாளில் இல்லறப்பந்தத்திலே 1959ல் புரட்டாதி 4ம் நாள், நவாலி வடக்கைச் சேர்ந்த சிவக்கொழுந்து பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகன் இராஜேஸ்வரன் அவர்களை அன்புத்துணையாக இறையருளால் வாய்க்கப்பெற்று இதற்கிடையில் தனது தொழிலுக்கும் முற்றுப்புள்ளி வைத்தார். இவரது இல்லற வாழ்க்கையின் இனிய பயனாக மூன்று அருமைப் புதல்விகளை பெற்று மகிழ்வுற்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2017ல் காலை வேளை ......

பத்திரிகை வாசிக்கும் போது



உணவிற்காக வீட்டு பலாப்பழத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுவை வலம் வந்தால்

பசுவின் உடலில் சகல தேவர்களும் சாந் நித்தியம் பெற்றிருக்கிறார்கள் என்று சாஸ்திரங்கள் கூறப்படுகின்றன. பசுவின் வலது கொம்பில் கங்கையும், இடது கொம்பில் யமுனையும் இருக்கின்றாள். மத்திய பகத்தில் சரஸ்வதி, முன்காலில் பிரமனும் பின்கால்களில் உருத்திரன் தன் பரிவாரங்களுடன் இரக்கின்றார்கள். குளம்பில் தேவர்களும் வாசம் செய்கின்றனர். பசுவின் பால் மடியில் சமுத்திரங்கள் இருக்கின்றன.அனைத்தும் தேவர்களும், முனிவர்களும் பசுவின் உடம்பில் இருப்பதால் பசுவை வலம் வந்து வணங்குதல், பூமியை வலம் வருவதற்குச் சமமாகும்.

**கடமை**

1. உலகத்தில் உனக்குப் பெரியது உனது கடமை.
2. முயற்சி உடையார் என்னும் இகழ்ச்சி அடையார்
3. பனையை வளர்ப்போம் பயனைப் பெறுவோம்
4. எம் கடன் பணி செய்த கிடப்பதே
5. ஆருயிர்கெல்லாம் அன்பு செய்

   ஆர்வத்துடன் தொண்டு செய்

"எங்கும் பொங்கட்டும் இறையருள்"

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

"வாழ்க வளர்க சமயப்பணி"

"மங்களம்! மங்களம்!! மங்களம்!!!

அந்தணர் மேலோங்கி வாழ்க! வாழ்க!! வாழ்கவே!!!

உள்ளமது உள்ளவரை
அள்ளித் தரும் நல்லவரை
விண்ணுலகம் வாவென்றால்
மண்ணுலகம் என்னாகும் இறைவா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தின் தத்துவம்

மரணத்தைப் பற்றி பெரும் பாலான மக்கள் முழுவதும் தவறான அபிப்பிராயம் கொண்டுள்ளார்கள். ஒருவர் இறந்துவிட்டால் அவரை இழந்து விட்டதாகக் கருதி அழுது அலறுகின்றனர். அறியாமையின் ஆபாறப்பட்ட கருத்துஇது. இழத்தல் என்ற சொல் நாம் ஒருபொருளைத் திரும்பவும் பெறாத விதத்தில் மறுபடி காண முடியாத முறையில் பறி கொடுத்து விட்டோம் என்னும் கருத்தையுடையது. ஆனால் மரணமோ அப்படியானது அன்று.

மரணத்தில் மருள்வது பஞ்ச பூதங்களான வெளியுடல் மேயாம் அதனுள் குடியிருந்த ஆத்மா அழிவதில்லை. போக்கு வர வந்த பொருள் அது. அதற்குத் தோற்றமும் இறுதியும் கிடையாது. வினைக் கூடாத நாம் பெற்ற இப்பூவுடலும் வினை முடிந்ததும் விழுந்து விடுகின்றது. எஞ்சியிருக்கும் வினைக்கும் பொருத்த ஓர் புதிய உடலைச் சீவன் எடுத்துக் கொள்கிறது.

இதனை ஒரு சட்டை மாற்றம் எனக் கருதுவதே அறிவுடைமை. உத்தியோகத்திற்கு வேண்டிய உடையை அணிகின்றார். அந்த வேலை முடிந்ததும் அதை அவர் கலைந்து விடுகிறார்.

நாம் உபயோகிக்கும் சட்டை அழுக்கேறி விட்டால் சலவைத் தொழிலாளி எடுத்துச் சென்று புதிதாக்கி தருகின்றான். பழைய ஆடை கிழிந்து கந்தையானால் அதை வீசி விட்டு புதிய உடையை அணியும் போது நாம் எப்படி மகிழ்ச்சி அடைகிறோமோ அதை விதத்தில் பழைய பிறவிபோய் புதிய பிறவி எடுக்கும் போது சீவன் மகிழ்ச்சியுடன் முன்னேறுகிறது.

நாம் அழுது புலம்புவதால் அதன் முன்னேற்றம் தடைப்படுவதுடன் நாம் துயரத்திலும் பங்கெடுக்கும் படி அந்தச் சீவனைக் கீழே இழுத்து விடுகிறோம். நம்முள் பலர் இவ்வுண்மையை விளங்கிக்கொள்வதில்லை.

இவ்வித அறியாமைக்கும் காரணமாய் இருப்பது நாம் நமது அன்புக்குரியாரின் உள்ளிருக்கும் ஆத்மாவை நேசியாது அது போர்த்திருக்கும் மண்ணாலிய சட்டை போன்ற உடலிடம் பாசமும் பற்றும் வைப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் அழியாப் பொருளான அவர்களது ஆன்மாவை நேசிப்போமாயின் நாம் அதனோடு எக்காலத்தும் தொடர்புவைத்து இன்புற்றிருக்கலாம். நாம் செய்யும் ஒவ்வொரு செய்கையும் நம்மை விட்டு பிரிந்திருக்கும் ஆன்மாவின் சாந்திக்காகவேயாகும்.

அதன் சாந்தியைக் கெடுக்கும் எண்ணமோ செயலோ எதுவும் தவிர்க்கப்படல் வேண்டும்.

எனவே இறந்தவருக்கும் நாம் செய்ய வேண்டிய கடமை இதுவேயாகும். கணவரே, அப்பாவே, மருமகனே, தம்பியே, மச்சானே, அண்ணாரே, சிநேகிதனே, அரிய அயலானே நீங்கள் உங்கள் யாக்கையை உதறிச் சென்றீர்கள். அளவு மிகுந்திருந்தீர்கள். ஆதரவு காட்டினீர்கள். எங்களுக்கு இன்பம் தந்தீர்கள். எவர்க்கும் இனியோயாய் உங்கள் நற்குணம் எங்கள் உயிருக்காகுக. உள்ளமடடும் கள்ளமின்றி உங்களைப் போல் எல்லோருக்கும் இனியராய வாழ்ந்து எங்கள் வினைகள் முடிந்ததும் ஆண்டவன் எங்களையும் ஆண்டு கொள்ளட்டும். கனவு நாடகம் போன்றஇப்புவி வாழ்வில் போவதும் வருவதும் கூடுவதும் பிரிதலும் பழையன கழிந்து புதியன புகுதலும் இயற்கையின் சட்டம்.

இதை விலக்க ஒருவராலும் முடியாது. இது இறைவன் அருள் ஆணை அவனே எல்லோர்க்கும் அருளட்டும் அமைதி நிலவட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Grandparents.....

Farewell to our grandparents who remain together even in death. We recall with confort the love our grandparents had for each other. Once we inquired as to who he was calling 'baby'. He looked at us and said not you but ammamma.

It was not always that we got to see our grandparents and only we go to see them during our holidays to Sri Lanka. Ammappa inspired us with his devout daily religious observances early in the morning, plucking flowers in his garden and offering incense to the God.

Ammamma always made our food when we were in Sri Lanka and we remember that even the most simplest fish curry and fried fish which would taste so nice.

Ammappa on the other hand was more into the family , finance and religion. He was very careful where we put the house keys and he would always lock the house with the laborious amount of keys which he owned successfully each and every day. He spent a lot of his time daily thinking about his temple and improvements that he could make to it . This was something that mattered to him immensely until the very end. We remember that whenever we had to call the Auto - 3 wheeler taxi - to take us somewhere we would always say that we were calling from the 'bankers house'. This is because our ammappa had the nickname of a 'banker' as he was very popular in Chundikuli.

Our ammamma whom we considered multilingual would sometime speak to us in both languages in order for us to understand things better. Most of the time our ammappa was staring directly towards the front door however we did not know that he knew what was going on around the whole house and was sometimes planning something to do in the very near future. If he couldn't think of anything to do you would often find ammamma sitting close to him in the hall and they would start talking about something very happily for some time until one of them thought about something and got up and went away. They always remained close to each other. Ammappa was always worried about ammamma's health and safety as he would often walk with her to places even around the house coming towards the final days.

Ammamma liked to wear purple sarees and we will miss her purple yam sweet pudding.

Rest in peace ammapppa and ammamma .

Loving Grandchildren,
Nikitha, Neeraj, Miluxmi and Suren.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள்மார், பேரப்பிள்ளைகளுடன் 2005 இல்



வீட்டுத்தோட்டத்தில் 2016 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது ஆலய தரிசனத்தின் போது




ஆலய பின்புறத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ஞான வைரவர் ஆலய புதிதாக கட்டப்பட்ட
சித்திரக் கஞ்சி மடம்



ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரத்துவத்திற்கான ஆசி வேண்டல்

அமரர் சிவக்கொழுந்து இராஜேஸ்வரன் அமரர் செல்வபாக்கியம் இராஜேஸ்வரன் ஆகியோருக்கான இறுதிக் கிரியைகளில் பங்கேற்று நான் ஆற்றிய உரையின் ஒரு சுருக்கமான செய்தியை மிக அவசரமாக கேட்டதிற்கிணங்க தருவதில் ஆத்ம திருப்தியடைகிறேன்.

முதற்கண் இத் தம்பதிகளின் இறைபதம் அடைந்தமையை எண்ணி புராணகால உடன்கட்டை ஏறும் பாரம்பரியத்தை நான் மனதில் கொள்கிறேன். அதாவது 12 மணிநேர இடைவெளியில் அதுவும் பூவோடும் பொட்டோடும் வாழ்ந்த இவர் மனைவியின் அமரத்துவம் எம்மால் இந்த நவீன யுகத்தில் நம்பமுடியாத ஒன்றாகவே உள்ளது. எங்களுக்கு அப்பாற்பட்ட ஆண்டவனின் அனுக்கிரகம் இவர்களுக்கு இருந்திருக்கின்றது என்பதையே இது உணர்த்தி நிற்கின்றது.

**மேலும் சில குறிப்புக்கள் வருமாறு:**

❖ இருபதுகளில் இலங்கை வங்கியில் இணைந்து அறுபதுகளில் ஓய்வு பெற்று 30 ஆண்டுகள் ஓய்வுதியம் பெற்று 90 வயதில் இறந்த இவர் ஒரு விசித்திர குணாதிசயம் (unique char actor)கொண்டவர்.

❖ HE IS A GRATE FIGHTER – அதாவது வங்கியில் இணைந்த காலத்திலிருந்து சக ஊழியர்களுக்காகவும் பொதுமக்களுக் காகவும் தலைமை நிர்வாகத்துடன் போராடி வெற்றி கொண்டு சரித்திரம் படைத்தவர். இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் முன்னோடி.

❖ வயது இருபத்தொன்று (21) ஆனதுந்தான் ஒருவர் சட்டபூர்வமான பிரஜை ஆகிறார் எனவே கணக்கு ஆரம்பிப் பதற்கும் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதெல்லை வரை இருக்க வேண்டுமென்ற நீண்ட கால வங்கியின் கொள்கையை மாற்றி வயது பதினெட்டு (18) ஆனதும் ஒருவர் இலங்கை வங்கியில் கணக்கை ஆரம்பிக்கலாம் என்றும் இதனால் வங்கிக்கும் பொதுமக்களுக்கும் நிறைய நன்மைகள் உண்டாகுமென இலங்கை வங்கி தலைமையகத்திற்கு இடித்துரைத்து வெற்றி கண்டதுடன் முகாமைத்துவத்தின் பராட்டுதல்களையும் பெற்றவர். இதனை பரவலாக இலங்கையில் பல நிறுவனங்களும் தமது நடைமுறையில் கொண்டுவந்தமைக்கு இவரே மூல காரணமாவார்.

❖ நான் BOC-A.G.M ஆக இருந்த காலப்பகுதியில் அதுவும் போர்க்காலம் நிறைந்தமையோடு திரு இராஜேஸ்வரன் என்னை அணுகி அதாவது Jaffna Managers Forum த்தினூடாகவும் திரு.வி. நிரஞ்சன் அவர்களின் அணுசரனையையும் பயன்படுத்திக் இலங்கை வங்கியின் வடமாகாண வைப்புக்கள் தெற்கில் பயன்படுத்தப்பட்டபோதும் பாதிக்கப்பட்ட வடமாகாண மக்களுக்கு இலங்கை வங்கி (Under Corporate Social Responsibility) எதுவித நலன்புரித் திட்டத்திற்கும் உதவவில்லை என்பதை சுட்டிக்காட்டி என்னாலான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு தூண்டினார்.

இதன் விளைவாக யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளத்தில் (Jaffna Managers' Forum ) ஒரு கலந்துரையாடலை திரு.வி.நிரஞ்சன் அவர்களின் (பிற்காலத்தில் தான் அமரர்இ திரு.வி.நிரஞ்சனின் சித்தப்பா முறையானவர் என அறிந்துகொண்டேன்). முயற்சியினால் வடமாகாணத்தின் மக்களுக்கான பல நன்கொடைகளை அப்போதைய இலங்கை வங்கி தலைவரான திரு.காமினி விக்ரமசிங்க (The Chairman of BOC Mr. Gammini Wickramasinghe) அவர்களின் அனுமதியுடன் பெற்றுக்கொண்டோம்.

இதில் முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய நிதி உதவியானது Jaffna Teaching Hospital லிருந்து DR.P.Luxman இருதய நிபுணர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் முகாமைத்துவம் செய்த Cardiologist unit க்கு பெறப்பட்ட ரூபா –3,000,000/- (Rs Three Million) ஆகும். இவ் விடயத்தில் எனக்கு தூண்டுகோலாக இருந்த அமரரைப் பற்றி நினைவு கூருவதில் இலங்கை வங்கியும் நானும் திருப்தியடைகிறேன்.

இறுதியாக இவரினதும் முன்னோரினதும் குல தெய்வமாகிய ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தினை இவரது சந்ததியினர் அவரைப் போல பக்திபுர்வமாக தொடர்ந்து நடாத்தி அமரர்களது ஆத்மா சாந்தியடைய உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென பக்குவமாக கேட்டுக்கொள்கிறேன்.

ஓம். சாந்தி சாந்தி சாந்தி
நன்றி

ந.சிவரட்ணம்
ஓய்வுநிலை உதவிப்பொது முகாமையாளர்,
(வடபிராந்தியம்)
இலங்கை வங்கி.

பிற்குறிப்பு

எனது குருவாகியவர்களில் திரு.K.சிவகாணநாதன் அவர்களுக்கும் என்னை இவ்வாறான பணிகளில் ஈடுபடச் செய்த திரு. K. பாலசுப்பிரமணியம் (Rtd A.G.M - BOC) அவர்களுக்கும் நன்றி கூற இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்த வாய்ப்பு தந்த திரு.வி.நிரஞ்சன் அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் எனது நன்றியறி தல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆத்ம சங்கமம்

எத்தனையோ நினைவஞ்சலி மலர்களில் அமரர்களது நினைவுகளையும் அவர்தம் பெருமைகளையும் பகிர்ந்துகொண்டுள்ளேன். கணவன், மனைவி இருவரும் அடுத்தடுத்தோ அல்லது ஒன்றாகவோ அமரர்களாகிய நிகழ்ச்சிகள் பல நடத்திருக்கின்றன. ஆனால் எமக்கு தெரிந்த , எம்மோடு நெருக்கமாகப் பழகிய ஒரு தம்பதியினர் ஒரே நாளில் அமரத்துவம் அடைந்ததைக் கண்ணுற்றபோது அதன் தாக்கங்கள் மனதில் வெகுவாக ஒரு பாதிப்பை ஏற்படுத்துவது அவர்களது உறவுப்பாலம் எம்மோடு அதிகமாய் இணைந்திருந்ததை எடுத்துக்காட்டும் ஒரு நிகழ்ச்சியாகும்.

ஒரு சோகமான, ஆனால் அந்நியோன்னிய ஆத்மாக்கள் இரண்டு ஒரு சேர சங்கமம் ஆனது ஒரு திரைக்கதையைச் செவிமடுத்தது போல் இருக்கிறது.

அமரர்கள் இராஜேஸ்வரனும் அவர்தம் பாரியாரும் எவ்வளவு அந்நியோன்னியமாக அன்பினால் கட்டுண்டு மறையும் வரை வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை எம்மால் இப்போதுதான் இதய பூர்வமாக உணரமுடிகிறது.

வங்கிச் சேவையில் பல காலம் இருந்தபோது அமரர் இராஜேஸ்வரன் கடைப்பிடித்த கடமை , கண்ணியம் கட்டுப்பாடு என்பவற்றை தற்காலம் நாம் காணுவது அரிதாக இருக்கிறது. இரண்டாம் கிளையில் அவர் கடமையாற்றியபோதுதான் அவரோடு எனக்கு பழக்கம் ஏற்பட்டது. அந்தக் காலத்தில் கணனிகள் கிடையாது எல்லாம் MANUAL தான் அந்த நேரத்திலும் வாடிக்கையாளர்களை அதிகம் காக்கவிடாமல் பம்பரமாகச் சுழன்று வேலை செய்வார். அவரை எதிர்த்து அவரின் முகாமையாளர் கூட பேசியதில்லை. அந்தளவுக்கு வேலைத்திறனும், நேர்மையும் கட்டுப்பாடும் கொண்டவர்.வாடிக்கையாளரை நீண்ட நேரம் காக்கவிடுவதை அவர் எப்போதுமே மனதார வெறுப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுபெற்றபின் அவர் வங்கிக்குப் போனாலும் அதே பண்புகளை எதிர்பார்ப்பார். சற்று கவனயீனமாக இருந்தாலும் அந்த உத்தியோகத்தரின் முகத்திற்கு நேராகவே கண்டனம் தெரிவிப்பார். இதனால் அவர் வங்கிக்கு வந்தால் உடனடியாக அவரை கவனிப்பது வாடிக்கையாகும். ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன்.

முன்பு ஓய்வூதியர்களின் மாதாந்த ஊழியத்தை பென்ஷன் வவுச்சரோடு நேரில் வங்கிக்கு வந்துதான் பெறவேண்டும் அதனால் பென்ஷன் தினங்களில் காலை ஆறுமணிக்கே நீண்டகியூ வரிசையில் காத்திருப்பார்கள். இரண்டு கவுண்டர்கள் போட்டாலும் நண்பகலுக்கு மேலாகிவிடும் எல்லாம் செலுத்திமுடிவதற்கு.

ஒருநாள் பென்ஷன் தினத்தில் வங்கிக்கு வந்த அமரர் இராஜேஸ்வரன் நீண்ட வரிசையில் பென்ஷன் ஊதியம் பெற வந்த வயோதிபர்கள் கால் நடுக்க நிற்பதைப் பார்க்கப் பொறுக்க முடியாமல் (அப்போதே அவரே ஒரு ஓய்வூதியர்) நேராக முகாமையாளரிடம் சென்று தான் ஒரு கவுண்டரில் வேலை செய்து வங்கிக்கு உதவுவதாகச் சொன்னார். அவரது நேர்மையையும் கண்ணியத்தையும் தெரிந்துவைத்திருந்த முகாமையாளர் அவர் ஒரு ஓய்வூதியர் என்றும் பாராமல் அனுமதி அளித்தார். அவரது நீண்ட அனுபவத்தாலும் விரைந்த சேவையாலும் காலை பத்துமணிக்கே எல்லாமே முடிவடைந்து விட்டது. இது ஒரு உதாரணம்.

எல்லா விடயங்களிலும் அவருக்குப் பக்கபலமாக இருந்த அவரது பாரியார் ஈருயிர் ஒருடலாகவே வாழ்ந்தது எல்லோருக்கும் தெரியும்.

அமரருக்கு மூன்று லட்சுமிகளைப்போல் மூன்று பெண்குழந்தைகள். அவரது தெய்வீகப்பணி அவருக்கு ஒரு குறையும் வைக்கவில்லை. நவாலி வடக்கு தேற்றா மரத்தடி ஆலயத்தையும் பராமரித்து அன்னதான மண்டபமும் ஒன்றையும் தன் சொந்தச் செலவில் கட்டியவர் சமீபத்தில் அந்த ஆலய வரலாறு பற்றிய ஒரு நூலையும் வெளியிட்டவர்.

அவர் மறைவதற்கு ஒன்றரை மாதம் முன்பு நாங்கள் சில ஓய்வூதியர்கள் அவர் வீட்டுக்குச் சென்றோம். அப்போதும் ஒரு இளைஞனைப் போல் எம்முடன் பழகினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தோம்பலில் தான் எவ்வளவு சிறந்தவர் என்பதையும் அமரரின் மனைவி அன்று நிரூபித்து எம்மை நெகிழச்செய்தார்.

இருவரும் ஒரு அந்நியோன்ய, ஆன்மீகமான, தெய்வத்தொண்டுடன் கூடிய சமூக சேவையாளர்களாக விளங்கினார்கள். அதன் பலனாக இறைவனும் அவர்கள் பாயில் படுத்து வியாதிகளை பெறாமல் மற்றையோருக்கும் தமக்கும் வேதனையில்லாமல் இருவரையும் ஒருசேர தன்னிடம் அழைத்துக்கொண்டார்.

இவர்களின சேவைகளும் செய்த புண்ணியங்களும் அவர்தம் மக்களை மேல்நிலைக்கு உயர்த்தும் அதேவேளை பெற்றோர்களை ஒரு சேர இழந்த அவர்கள் பிள்ளைகளின் சோகம் கால ஓட்டத்தால் மறைந்து அவர்கள் பெற்றோரின் பெருமைகளை மட்டும் நெஞ்சில் சுமந்து கொண்டிருப்பர். அவர்களை இறைவன் ஆசிர்வதிப்பாராக.

க.பாலசுப்பிரமணியம்<br>
ஓய்வுநிலை உதவிப்பொதுமுகாமையாளர்<br>
(வட பிராந்தியம்),<br>
இலங்கைவங்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தின் மகிமை

| | | |
|---|---|---|
| ஐங்குரவர் | - | தாய்,தந்தை,குரு,அரசன்,தமையன் |
| ஐம்பொறிகள் | - | மெய், வாய், கண், மூக்கு, செவி |
| ஐம்புலன்கள் | - | சுவை, ஊறு, ஒளி, ஓசை, நாற்றம் |
| ஐம்பூதங்கள் | - | நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் |
| ஐவகை இசைக்கருவி | - | தோல்,துளை,பிடறு,நரம்பு,கந்சல் |
| ஐவகை வண்ணங்கள் | - | வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை |
| ஐவகை தொழில்கள் | - | படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் |
| ஐம்பெரும் பாதகங்கள் | - | கொலை, பொய், களவு, சூது, விபச்சாரம் |
| ஐவகை நிலம் | - | குறிஞ்சி,முல்லை,நெய்தல்,பாலை, மருதம் |

## விகடத் துணுக்குகள்

நமது மந்திரிகள்

| | | |
|---|---|---|
| மூளை | - | பிரதம மந்திரி |
| தண்டு வடம் | - | இணை அமைச்சர் |
| நரம்பு மண்டலம் | - | ஊடகத்துறை அமைச்சர் |
| தலை | - | கல்வி அமைச்சர் |
| தோல் | - | மனித வள மேம்பாட்டு அமைச்சர் |
| எலும்பு | - | பாதுகாப்பு அமைச்சர் |
| கண் | - | வெளியுளவுத் துறை அமைச்சர் |
| காது | - | தபால் தொலைத் தொடர்புகள் |
| மூக்கு | - | சுகாதாரத் துறை அமைச்சர் |
| பல் | - | கிராமியத் துறை அமைச்சர் |
| இதயம் | - | உள்நாட்டு விவகாரத்துறை |
| கை | - | தொழில் துறை அமைச்சர் |
| வயிறு | - | உணவுத் துறை அமைச்சர் |
| கால் | - | போக்குவரத்து துறை அமைச்சர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு நிறைவு விழாக்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1ம் | வருட | நிறைவு | விழா | - | காகித விழா |
| 2ம் | வருட | நிறைவு | விழா | - | பருத்தி விழா |
| 10ம் | வருட | நிறைவு | விழா | - | தசாப்த விழா |
| 15ம் | வருட | நிறைவு | விழா | - | பளிங்கு விழா |
| 20ம் | வருட | நிறைவு | விழா | - | பீங்கான் விழா |
| 25ம் | வருட | நிறைவு | விழா | - | வெள்ளி விழா |
| 30ம் | வருட | நிறைவு | விழா | - | முத்து விழா |
| 40ம் | வருட | நிறைவு | விழா | - | மாணிக்க விழா |
| 50ம் | வருட | நிறைவு | விழா | - | பொன் விழா |
| 60ம் | வருட | நிறைவு | விழா | - | வைரவிழா / மணிவிழா |
| 75ம் | வருட | நிறைவு | விழா | - | பவள விழா |
| 80ம் | வருட | நிறைவு | விழா | - | அமுத விழா |
| 100ம் | வருட | நிறைவு | விழா | - | நூற்றாண்டு விழா |

## சர்வதேச நிறுவனங்கள்

| | |
|---|---|
| **WHO** | - உலக சுகாதார நிறுவனம் |
| **FAO** | - உணவு மற்றும் விவசாய நிறுவனம் |
| **U.N** | - ஐக்கிய நாடுகள் சபை |
| **UNESCO** | - ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான பண்பாட்டு முன்னேற்ற கழகம் |
| **OPEC** | - பெற்றோல் உற்பத்தி நாடுகளின் கூட்டு |
| **G8** | - உலகின் பிரதான கைத்தொழில் நாடுகளின் ஆராய்சி ஸ்தாபனம் |
| **SAARK** | - தெற்காசிய நாடுகளின் கூட்டு |
| **IMF** | - சர்வதேச நிதி நிறுவனம் |
| **IATA** | - சர்வதேச விமான போக்குவரத்து நிறுவனம் |
| **ILO** | - சர்வதேச தொழிலாளர் நிறுவனம் |
| **ICC** | - சர்வதேச கிரிகெட் சம்மேளனம் |
| **UFU** | - சர்வதேச தபால் துறை அமைப்புஸ |
| **IMCO** | - சர்வதேச கடற்பாதுகாப்பு நிறுவனம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

எமது அன்புத் தெய்வங்கள் அமரர் திரு. சிவக்கொழுந்து இராஜேஸ்வரன். அமரர் திருமதி. செல்வபாக்கியம் இராஜேஸ்வரன்அவர்கள் நோயுற்றிருந்த காலத்தில் பலவித மருத்துவ உதவிகளை புரிந்த யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்கள்,தாதிகள்,சேட்டிஸ்(certis) நிறுவன இரவு பகலாக கண்காணித்த ஊழியர்கள் ஆகியோருக்கும், மரணச்செய்தியை கேட்டு ஓடோடி வந்து பல்வேறு உதவிகள் செய்தும், ஆறுதல் கூறியும், அரவணைத்தும், மரணச் சடங்கு வைபவத்தில் சமூகமளித் தவர்களிற்கும், எம்முடன் கூட இருந்து கடமைகள் பல புரிந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்திய அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு நண்பர்கள், உறவினர்களுக்கும், ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டு பல்வேறு உறுதுணை அளித்த அன்பு உள்ளங்களுக்கும், அந்தியேட்டி வீட்டுக்கிரியையில் எம்முடன் பிரார்த்தனை செய்தோருக்கும், இக்கிரிகைகளை ஆற்றிய அந்தணப் பெரியோர்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகள் என்றென்றும் உரித்தாகுக.

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

**- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org